9T9BC1

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்வு செய்க:

1. இந்தியாவில் ________ மாநிலங்களும், ________ யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

அ) 27, 9 ஆ) 29, 7

இ) 28, 7 ஈ) 28, 9

2. இந்தியா ஒரு ________ என்று அழைக்கப்படுகிறது.

அ) கண்டம் ஆ) துணைக்கண்டம்

இ) தீவு ஈ) இவற்றில் எதுமில்லை

3. மிக அதிக மழைப்பொழிவுள்ள மௌசின்ராம் ________ மாநிலத்தில் உள்ளது.

அ) மணிப்பூர் ஆ) சிக்கிம்
இ) நாகலாந்து ஈ) மேகாலயா

4. கீழ்கண்டவற்றில் எந்த மதம் இந்தியாவில் நடைமுறையில் இல்லை?

LIVEWORKSHEETS

அ) சீக்கிய மதம்

ஆ) இஸ்லாமிய மதம்

இ) ஜொராஸ்ட்ரிய மதம்

ஈ) கன்ஃபூசிய மதம்

5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை _______

அ) 25 ஆ) 23

இ) 22 ஈ) 26

6. _______ மாநிலத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அ) கேரளா ஆ) தமிழ்நாடு

இ) பஞ்சாப் ஈ) கர்நாடகா

7. மோகினியாட்டம் _______ மாநிலத்தின் செவ்வியல் நடனம் ஆகும்.

அ) கேரளா ஆ) தமிழ்நாடு

இ) மணிப்பூர் ஈ) கர்நாடகா

8. "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற நூலினை எழுதியவர் _______

அ) இராஜாஜி ஆ) வ.உ.சி

இ) நேதாஜி ஈ) ஜவகர்லால் நேரு

9. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற சொற்றொடரை உருவாக்கியவர் _______

அ) ஜவகர்லால் நேரு

ஆ) மகாத்மா காந்தி

இ) அம்பேத்கார்

ஈ) இராஜாஜி

10. வி.ஏ. ஸ்மித் இந்தியாவை _______ என்று அழைத்தார்.

அ) பெரிய ஜனநாயகம்

ஆ) தனித்துவமான பன்முகத்தன்மை கொண்ட நிலம்

இ) இனங்களின் அருங்காட்சியகம்

ஈ) மதச்சார்பற்ற நாடு

LIVEWORKSHEETS

## *II.* கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. ஒரு பகுதியின் ________ நடவடிக்கைகளை அப்பகுதியின் நிலவியல் கூறுகளும் காலநிலைகளும் பெரிதும் தீர்மானிக்கின்றன.
2. மிகவும் குறைந்த மழைப்பொழிவுள்ள ஜெய்சால்மர் ________ மாநிலத்தில் உள்ளது.
3. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு ________
4. பிஹு திருவிழா ________ மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.

## *III.* பொருத்துக:

1. நீக்ரிட்டோக்கள் – அ) மதம்

2. கடற்கரை பகுதிகள் – ஆ) இந்தியா

3. ஜொராஸ்ட்ரியம் – இ) மீன்பிடித்தொழில்

4. வேற்றுமையில்

ஒற்றுமை – ஈ) இந்திய இனம்

LIVEWORKSHEETS